CASE NO : ESIOP 64/2025

NAME : PW1 – S. சின்னசாமி

DATE : 06.04.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி,

SSO மனுதாரர் நிறுவனத்திற்கு ஆய்வு செய்தார் என்று நான் ஒப்பு கொள்கிறேனா என்றால் எங்கள்நிறுவனம் மூடப்பட்டுவிட்டது என்று நான் கடிதம் அனுப்பிய பின்பு எதிர்மனுதாரர் ஆய்வு செய்தார். பின்பு எதிர்மனுதாரர் 30.01.2020 அன்று SSOவின் ஆய்வு சமயத்தில் வருகை பதிவேடுகள், சம்பள ரசீதுகள் மற்றும் bank details போன்ற விவரங்களை சமர்பித்தீர்களா என்றால் எங்கள் நிறுவனம் இயங்கி கொண்டிருக்கிறதா இல்லையா என்று புகைப்படம் மட்டுமே எடுத்து கொண்டார்கள். அப்போது எங்கள் நிறுவனம் இயங்கவில்லை. வேறு எந்த ஆவணமும் கேட்கவில்லை. நிறுவனத்திற்குள் வரவில்லை. எங்கள் நிறுவனம் board இல்லை என்பதால் gate ல் நின்று புகைப்படம் மட்டுமே எடுத்து கொண்டார்கள். எனக்கு இந்த விவரம் எவ்வாறு தெரியும் என்றால் மனுதாரர் நிறுவனம் எங்கள் வீட்டின்

மேல் மாடியில் தான் இருந்தது. அதனால் கீழ் தளத்தில் உள்ள எனது வீட்டில் என் மனைவி மற்றும் என் குழந்தைகள் இருந்தார்கள். அவர்கள் எனக்கு இந்த விவரத்தை சொன்னார்கள். மனுதாரர் நிறுவனம் சொந்த கட்டிடத்தில் தான் இயங்கி வருகிறது என்று எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு மற்றும் நீதிமன்றத்திற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. முகவரி மட்டுமே கொடுத்துள்ளேன். மனுதாரர் நிறுவனம் இயங்கியது என்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. ஏனென்றால், மனுதாரர் நிறுவனம் ஆரம்பிக்கவே இல்லை. நான் ESI code பெற்ற வருடம் 2017. ஆனால் Ex P7 ஆவணத்தின் படி 25.08.2020 தேதியில் ESI code number யை cancel செய்வதற்கு எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு கடிதம் கொடுத்தேன் என்றால் முதலிலேயே நான் நிறுவனம் ஆரம்பிக்கவில்லை என்று கடிதம் கொடுத்ததை முன்னிட்டு விசாரணைடியின் போது deputy director என்னிடம் எழுதி கொடுக்க சொன்னதால் நான் Ex P7 கடிதம் கொடுத்தேன். Ex P7 கடிதம் DDயிடம் கொடுத்ததற்கு அத்தாட்சி தாக்கல் செய்யப்படவில்லை என்றால் Ex P7 ஆவணம் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

அந்த கடிதம் பெற்றதை குறித்து ESI நிறுவனம் 45A உத்தரவில் பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 2017 ல் தொடங்கிய நிறுவனத்தை 2020 வரை என்ன செய்தோம் என்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் C-18 notice adhoc basis வழங்கப்பட்டு மற்றும் 45A உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ESI சட்டம் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே நாங்களே முன் வந்து ESI code யை activate செய்து விட்டு 27 நபர்கள் பணியாற்றுகிறார்கள் (employee ) என்று குறிப்பிட்டு ESI code பெறப்பட்டு, ஆனால் போதிய ஆவணங்களை பராமரிக்காமல் நிறுவனத்தை நடத்தி வந்துள்ளோம் என்றால் சரியல்ல. எனவே இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் ஆரம்பிக்கவே இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.